(c) (i) மெய் வாயுக்கள் இலட்சிய நடத்தையிலிருந்து விலகுவது ஏன் என்பதை விளக்குக.
(ii) மேற்படி விலகுதல்கள் எவ்வாறு வரைபடத்தில் லவம் எடுத்துக்காட்டப் படுகிறது என்பதனை ஒப்பிடுக.

(d) உயிர் வாழும் தொகுதிகளில் இகரசல் பிணைப்புகளின் முக்கியத்துவத்தினை ஒரு சுருக்கமான கட்டுரை வரைக.
மு.கு. நான்கு அம்சங்களை பற்றி கருத்தில் கொள்ளப்படல் போதுமானது.

விடை:-

5. (a) வாயுக்கள் A, B இலிருந்தவிடத்தை கருதினால்,
வாயு A யில்,
மூல் எண்ணிக்கை = $n_A$
பகுதியமுக்கம் = $P_A$
வாயு B யில்
மூல் எண்ணிக்கை = $n_B$
பகுதியமுக்கம் = $P_B$
கலவையில் (வாயு A + வாயு B) மொத்தக்கனவளவு = V
இயக்கவியல் வலைகளுக்கு சமன்பாட்டை பிரயோகிப்பீர். ($PV = \ldots$)

வாயு A க்கு $P_AV = 1/3\, m_A n_A \overline{c_A^2}$
வாயு B க்கு $P_BV = 1/3\, m_B n_B \overline{c_B^2}$

$$n_A = \frac{3P_AV}{m_A\overline{c_A^2}} = \frac{3}{2} \cdot \frac{P_AV}{\frac{1}{2}m_A\overline{c_A^2}}$$

[illegible]-போல்

Find more at: chemistrysabras.weebly.com
Twitter: ChemistrySabras

கூறு A யினதும், கூறு B யினதும் சராசரி இயக்கப்பாட்டுச் சக்திகள் சமனாகும். ஏனெனில் வெப்பநிலைகள் சமனாகும்.

$$\therefore \quad \tfrac{1}{2} m_A \overline{c_A^2} = \tfrac{1}{2} m_B \overline{c_B^2} = \overline{E}$$

$$\therefore \quad n_A = \frac{3}{2} \cdot \frac{P_A V}{\overline{E}} \qquad n = \frac{3}{2} \cdot \frac{P_B V}{\overline{E}}$$

கலவைக்கு, $n_{total} = \frac{3}{2} \cdot \frac{P_{total} V}{\overline{E}}$

ஆனால் $n_{total} = n_A + n_B$

$$\frac{3}{2} \cdot \frac{P_{total} V}{\overline{E}} = \frac{3}{2} \frac{P_A V}{\overline{E}} + \frac{3}{2} \frac{P_B V}{\overline{E}}; \quad P_{total} = P_A + P_B$$

(b)(1) இங்கிக்கப்பட்ட பாத்திரத்தின் X இனதும் Y இனதும் பகுதியமுக்கங்கள் முறையே Px, Py ஆகும்.

$P_1V_1 = P_2V_2$ இல்

$2\ dm^3 \times 1\ atm = 6\ dm^3 \times Px$ ; $Px = 0.333\ atm$

$4\ dm^3 \times 3\ atm = 6\ dm^3 \times Py$ ; $Py = 2\ atm$

ஆகவே பாத்திரத்திலுள்ள மொத்த அமுக்கம்

$= (2 + 0.333) = 2.333\ atm$

(11) $2\ dm^3$ பாத்திரத்திலுள்ள Y இன் அமுக்கமே இங்கே உள்ள Y இன் பகுதியமுக்கமாகும்.

எனவே $Py = 2.000\ atm$

(111) X இன் மூல் பின்னம் $= n_X / (n_X + n_Y) = Px/(Px + Py)$

$= \frac{0.333\ atm}{2.333\ atm}$

$= 0.1428$

(IV) இன் மூல் பின்னம் $= 1 - 0.143$

$= 0.857$

அல்லது $= \frac{2.000\ atm}{2.333\ atm}$

$= 0.857$

வெப்பநிலையை 310 K ஐவிட அதிகரிப்பினும் Y இன் மூல் பின்னத்தில் மாற்றத்தை எதிர் பார்க்க முடியாது.

(c)(1) மெம்வாயுக்களின் மூலக்கூறிடைக் கவர்ச்சிவிசைகள் எப்பொழுதும் புறக்கணிக்கமுடியாதவை. எனவே இலட்சிய நிலையின் அமுக்கத்தைவிட மெம்வாயுவின் அமுக்கம் குறைவாகும்.
மெம்வாயுக்களின் மூலக்கூறுகளின் கனவளவு எப்பொழுதும் புறக்கணிக்க முடியாதவை. எனவே வாயுமூலக்கூறுகளின் அசைந்து திரியக்கூடிய கனவளவு வாயு கொள்ளக்கூடிய கனவளவினும் குறைவாகவிருக்கும்.
மெம்வாயுக்களின் மூலக்கூறுகளின் மோதுகையால் மீள்தன்மையுடையதல்ல. அத்துடன் திட்டமான கோளவடிவினதாக இருக்கமாட்டா.



(11) மாறு வெப்பநிலையில் PV எதிர் P வரைபு பின்வருமாறு




அல்லது PV/nRT எதிர் P வரைபு பின்வருமாறு:




(d)(1) அறைவெப்பநிலையில் நீர் திரவநிலையில் காணப்படுவதற்கான கா ஐதரசன் பிணைப்பாகும். இவ்வாறு நீர் திரவநிலையில் பூமியில் காண டாவிடின் உயிரினங்கள் தோன்றியிருக்க மாட்டாது.

(2) நீரில் ஐதரசன் பிணைப்புகள் காணப்படுவதால் உயர் வெப்பக்கடத் உடையதாகக் காணப்படுகின்றது. எனவே உயிர்த் தொகுதியில் உள் வெப்பத்தைக் கடத்தி கட்டுப்பாடான நிலையைப் பேண உதவும்.

(3) நீர் ஆவியாதலின் மறைவெப்பம் மிக உயர்வாகக் காணப்படுகிறது. இதற்குக் காரணம் ஐதரசன் பிணைப்பாகும். இதனால் உயிர்த் தொகு களின் வெப்பநிலை உயர்வானது, சிறிதளவு நீர் ஆவியாதல் மூலம் இலகுவில் கட்டுப்படுத்தப்படும்.

(4) நீரின் தன் வெப்பக் கொள்ளளவு உயர்வாகையால் உயிர்த்தொகுதி நடைபெறும் வெப்பநிலை மாற்றங்கள் கட்டுப்பாடான நிலையில் பே படுகின்றன.

(5) பனிக்கட்டியில் காணப்படும் ஐதரசன் பிணைப்புகள் காரணமாக இ அடர்த்தி திரவநிலையிலுள்ள நீரின் அடர்த்தியினும் குறைவாக இருக்கு இதனால் பனிக்கட்டி நீரில் மிதக்கும். எனவே குளிர் காலங்களில் மிதக்கும். எனவே குளிர்காலங்களில் நீரில் மிதக்கும் பனிக்கட்டிகளி ஊடாக நீர் முழுவதும் உறைவதில்லை. இதனால் நீர்வாழ் உயிரினங்கள் அழிக்கப்படுவதில்லை.

(6) புரதத்திலுள்ள புரதமூலக்கூறுகள் ஒவ்வொன்றும் ஐதரசன் பிணைப்பு பிணைந்து காணப்படுகின்றன. இதனால் புரதம் வலிமையடைகிறது. இ விலங்குகளுக்கு முக்கியமானதாகும்.

(7) செலுலோசு மூலக்கூறுகளுக்கிடையில் காணப்படும் ஐதரசன் பிணைப்பு இவற்றின் வலிமைக்குதவும். இது தாவரங்களுக்கு முக்கியமானதொன்று

(8) DNA மூலக்கூறின் இரட்டைச்சுருளி அமைப்புக்குக் காரணம் ஐதரசன் பிணைப்புகளாகும். இது உயிர்தொகுதி எல்லவற்றுக்கும் மிக முக்கியமானதாகும்.

6.(a) கீழே தரப்பட்டுள்ள சமநிலையில் Kp, Kc ஆகியவற்றிற்கிடையேயு தொடர்பினைப் பெறுக.

$$qQ(g) + rR(g) \rightleftharpoons sS(g) + tT(g)$$

(b) 1.0 மூல் புறப்பனெயிக் அமிலமும் 1.5 மூல் எதனோலும் கலக்கப்ப குறிப்பிட்ட ஒரு வெப்பநிலையில் சமநிலை அடையவிடப்பட்டது. சமநிலை கலவையின் ஈரிலில் ஒரு பகுதியைப் பிரித்தெடுத்து நீர் சேர்க்கப்பட் அப்படிப் பெறப்பட்ட கலவை 0.10 mol l⁻¹ NaOH உடன் தகுதியான காட்டியைப் பாவித்து நியமிப்புச் செய்யப்பட்டது. இந்நியமி அளவு வாசிப்பு 20.0 ml ஆகும். இந்த எத்தராக்கத் தாக்கத்தை கூய சம்பந்தப்பட்ட வெப்பநிலையில் கணிக்க.

(c) HBr, $H_2SO_4$ ஆகிய இரண்டிற்குமிடையேயுள்ள தாக்கத்தை மீளச்செய்ய முடியுமென்பதை எளிமையான பரிசோதனை மூலம் எவ்வாறு காட்டுவீரென விளக்குக.

(d) ஆமிலகூடத்தில் பின்வரும் தாக்கத்தில் $H^+(aq) + OH^-(aq) \longrightarrow H_2O($

Find more at chemistrysabras.weebly.com
Twitter: chemistrysabras

0.1 mol $l^{-1}$ $H_2SO_4$, 0.1 mol $l^{-1}$ $Ba(OH)_2$ ஆகியன முறையே அமிலமாகவும், மூலமாகவும் தரப்பட்டுள்ளன. உமக்கு ஆய்வுகூடத்தில் பொதுவாகக் கிடைக்கும் இரசாயனப் பதார்த்தங்கள், கண்ணாடிப் பொருட்கள், உபகரணங்கள் தரப்பட்டுள்ளன. ஆனால் வேறு அமிலங்களோ மூலங்களோ தரப்படவில்லை. இந்நிபந்தனைகளின் கீழே மேற்படி வெப்ப உள்ளுறை மாற்றத்தினை எவ்வாறு பரிசோதனைமுறையில் நிர்ணயிப்பீர் என்பதனைத் தெளிவாக விளக்குக.

மு.கு: $Ba(OH)_2$, $H_2SO_4$ ஆகிய கரைசல்களைக் கலக்கும்போது ஒரு வீழ்படிவு தென்படும். இவ்வீழ்படிவை நிவர்த்தி செய்வதற்கு ஒரு வழிமுறையினையும் நீர் கைக்கொள்ள வேண்டும்.

விடை:-

6. (a) $qQ(g) + rR(g) \rightleftharpoons sS(g) + tT(g)$ எனும்

சமநிலையைக் கருதினால்

$$Kp = \frac{P_S^s \times P_T^t}{P_Q^q \times P_R^r} \quad ; \quad Kc = \frac{[S]^s \times [T]^t}{[Q]^q \times [R]^r}$$

தொகுதியின் வெப்பநிலை T எனவும், கனவளவு V எனவும் கொண்டால் இது இலட்சியவாயுவின் நடத்தைக்குட்படுவதாக கருதினால்,

$P_S = n_S \times \frac{RT}{V}$ $\qquad P_T = n_T \times \frac{RT}{V}$

$P_Q = n_Q \cdot \frac{RT}{V}$ $\qquad P_R = n_R \cdot \frac{RT}{V}$

S இன் மூல் எண்ணிக்கை $= n_S$
T இன் மூல் எண்ணிக்கை $= n_T$
Q இன் மூல் எண்ணிக்கை $= n_Q$
R இன் மூல் எண்ணிக்கை $= n_R$

ஆனால் செறிவு $= n/V$

எனவே $[S] = n_S/V$ ; $[T] = n_T/V$ ; $[Q] = n_Q/V$
$[R] = n_R/V$

$\therefore$ $P_S = [S]RT$ ; $P_T = [T]RT$ ; $P_Q = [Q]RT$ ; $P_R = [R]RT$

$$\therefore Kp = \frac{[S]^s \times [T]^t}{[Q]^q \times [R]^r} \times (RT)^{(t+s)-(q+r)}$$

$$\therefore Kp = Kc \times RT^{\Delta n}$$

இங்கு $\Delta n$ என்பது மூல் எண்ணிக்கையில் ஏற்பட்ட மாற்றம்.

(b) $CH_3CH_2COOH + NaOH \longrightarrow CH_3CH_2COONa + H_2O$

எசுத்தராக்கத்தின் பின் (சமநிலையின் பின்) எஞ்சிய அமிலத்தின் மூல் எண்ணிக்கை $= \frac{0.10}{1000} \times 20 \times 100$

$= 0.20$ mol

எசுத்தராக்கத்தில் பங்கு கொண்ட அமிலத்தின் மூல் எண்ணிக்கை

$= (1.0 - 0.20) = 0.8$ மூல்

ஆகவே உருவாகிய எசுத்தரின் மூல் எண்ணிக்கை $= 0.8$ மூல்,
ஆகவே உருவாகிய நீரின் மூல் எண்ணிக்கை $= 0.8$ மூல்
எசுத்தராக்கத்தின் பின் எஞ்சிய அமிலத்தின் மூல் எண்ணிக்கை (சமநிலையின் பின்)

$= (1.5 - 0.8) = 0.7$ மூல்

அதாவது; அமிலம் + அற்ககோல் $\rightleftharpoons$ எசுத்தர் + நீர்

| | அமிலம் | அற்ககோல் | எசுத்தர் | நீர் |
|---|---|---|---|---|
| ஆரம்பத்தில் | 1.0 மூல் | 1.5 மூல் | 0 மூல் | 0 மூல் |
| சமநிலையின் பின் | 0.2 மூல் | 0.7 மூல் | 0.3 மூல் | 0.8 மூல் |

$\therefore$ சமநிலையின் பின் கனவளவு V எனின்,

எசுத்தரின் செறிவு $= \frac{0.8}{V}$ மூல்/லீற்றர்

நீரின் செறிவு $= \frac{0.8}{V}$ mol $l^{-1}$

அமிலத்தின் செறிவு $= \frac{0.2}{V}$ mol $l^{-1}$

அற்ககோலின் செறிவு $= \frac{0.7}{V}$ mol $l^{-1}$

$$\therefore Kc = \frac{\frac{0.8}{V} \text{ மூல்/லீற்றர்} \times \frac{0.8}{V} \text{ மூல்/லீற்றர்}}{\frac{0.2}{V} \text{ மூல் லீற்றர்} \times \frac{0.7}{V} \text{ மூல்/லீற்றர்}}$$

$Kc = 4.57$

(c) செறி $H_2SO_4$ உடன் HBr ஐ தாக்கும் போது காரணமாக செங்கபில நிறப்புகை உருவாகும். இதில் வெளியேறும் $SO_2$ ஆனது சுண்ணாம்புத் தெளிநீரை பாலாக்கும் போது செங்கபில நிறம் நீக்கப்படுகின்றன. கலவையில் உள்ள $SO_2$ இல்லை $BaCl_2$ கரைசல் சேர்க்கும்போது வெள்ளைநிறவீழ்படிவு பெறப்படும்.

தாக்கம் $2HBr + H_2SO_4 \longrightarrow Br_2 + SO_2 + 2H_2O$

(d) உதாரணமாக; 50 ml $H_2SO_4$ கரைசலையும், 50 ml $Ba(OH)_2$ கரைசலையும் ஒன்றுடன் ஒன்று தாக்கமுறச்செய்த நிகழும்வெப்ப மாற்றம் அளவிடப்படும். இதனை xKJ எனக்.

$H_2SO_{4(aq)} + Ba(OH)_{2(aq)} \longrightarrow BaSO_{4(s)} + 2H_2O_{(l)}$

உருவான $H_2O$ யின் மூல் எண்ணிக்கை பின்வருமாறு

$0.1$ மூல்/லீற்றர் $\times \frac{50}{1000}$ லீற்றர் $\times 2 = 0.01$ mol

$\therefore$ 1 மூல் நீர் உருவாவதற்கு தேவையான வெப்பஉள்ளுறை மாற்றம்

$= \frac{x}{0.01}$ KJ

பிறிதொரு 50 ml $H_2SO_4$ கரைசலை, 50 ml 0.1 M $NaOH$ கரைசலுடன் தாக்கமுறவிட்ட பெறப்படும் வெப்பமாற்றம் அளவிடப்படும். இதனை y kj எனக்.

தாக்கம் $H_2SO_{4(aq)} + NaCl_{2(aq)} \longrightarrow BaSO_{3(s)} + 2H^+_{(aq)}$

எனவே வெப்பஉள்ளுறை மாற்றம் – (நடுநிலையாக்கத்தின் போது நீரை உருவாக்கல்)

$= \frac{y}{0.01}$ kj

Find more at: chemistrysabras.weebly.com
Twitter:ChemistrySabras

(c) [illegible] கரைசல் (தாங்கி [illegible]) [illegible] வும் வெளியேறும். தொடர் விளைவுக்கரைசலானது (மிகுதிப்படுத்தப்பட்ட கரைசல்) $NH_3$ வுடன் கொண்டிருக்கும். எனவே இக்கரைசலானது இப்போது $NH_4Cl$ மும் $NH_3$ யையும் கொண்ட நிலையிலிருப்பதால் தாங்கற் தன்மையைக் காட்டும்.

எனவே சிறிதளவு $H^+$ (அமிலத்தைச்) சேர்த்தால் $NH_3$ [illegible] நடுநிலை யாக்கப்படும் தொடர் pH பெறுமானம் மாற்றமடையாது.

$$H^+_{(aq)} + NH_{3(aq)} \longrightarrow NH^+_{4(aq)}$$

சிறிதளவு வல்காரத்தைச் சேர்த்தால், $NH_4Cl$ ஆனது பெரும்பகுதி பொருளாக அதாவது மிகச் சிறிதளவு அமுக்கமடைகின்ற நிலைக்கு மாற்றப்படும். தொடர் pH பெறுமானம் பெரும்பாலும் மாற்றமடையாதிருக்கும்.

$$NH_4Cl_{(aq)} + OH^- \longrightarrow NH_4OH + Cl^-$$

8.(a)(i) ஒரு $H_2O_2$ நீர்க்கரைசலானது மாறுவெப்பநிலையில் காரங்களுடன் பின் வருமாறு வக்கிப் பிரிந்தழிவை அடைகிறது.

$$2H_2O_{2(aq)} \longrightarrow 2H_2O\ (l) + O_{2(g)}$$

இத்தாக்க வேகத்தை பின்வருமாறு குறிப்பிடலாம்.

பிரிந்தழிவு வேகம் $\propto [H_2O_2]^m$

m இன் பெறுமானத்தை பரிசோதனை மூலம் நிர்ணயிப்பதற்கு வழிமுறையொன்றினைப் பிரேரிக்க.

மு.கு: செய்முறை விபரங்கள் அவசியமற்றது.

(ii) $\frac{1}{2}A + B \longrightarrow C$ எனும் தாக்கத்தின் C யினுடைய ஆக்க வேகத்தினை பின்வருமாறு குறிப்பிடலாம்.

வேகம் $= k[A]^x \times [B]^y$

இத்தாக்கம் சம்பந்தமாக, மாறுவெப்பநிலையில் நடாத்தப்பட்ட பல பரிசோதனைகளின் வாயிலாகக் கிடைக்கப் பெற்ற ஒரு முக்கிய உண்மைகள் பின்வருமாறு:

(i) ஒரு பரிசோதனைகளில் A யின் செறிவு விகிதம் 1:1 ஆகவும், B யின் செறிவு விகிதம் 1:2.02 ஆகவும் இருந்தபோது, சம்பந்தப்பட்ட வேகங்களின் விகிதமானது 1:3.95 ஆகும்.

(ii) வேறொரு பரிசோதனைகளில் A யின் செறிவு விகிதம் 3:1 ஆகவும் B யின் செறிவு விகிதம் 1:4 ஆகவும் இருந்தபோது, சம்பந்தப்பட்ட வேகங்களின் விகிதமானது 1:0.59 ஆகும்.

இத்தாக்கத்தின் x, y என்பவற்றின் பெறுமானங்களைக் கணிக்க.

(b) வெளி உலோகமும், வெளி தனித்திரேற்று நீர்க்கரைசலும் கொண்ட நியம அரை மின்கலத்தின் [illegible] ஆகும். லெச்சற்றலேயரின் (Le Chatelier's) தத்துவத்தைப் பாவித்து

(i) $Ag^+$ செறிவு கூடும்போது

(ii) $Ag^+$ செறிவு குறையும் பொழுது எவ்வாறு வெளி மின்வாயின் அமுக்கம் மாறுகின்றதென்பதை விளக்குக.

(c) கதிர்த்தொழிற்பாட்டை அளப்பதற்குப் பயன்படும் இரண்டு வழிமுறைகளைப் பற்றிய சுருக்கமான விபரத்தை எழுதுக.

விடை:-

8.(a)(i) சிறிதளவு காரத்தை $H_2O_2$ கரைசலுடன் சேர்த்தால் ஒட்சிசன் வாயு [illegible] அமைப்பொன்றை ஒழுங்குபடுத்தல் எனவே [illegible] $H_2O_2$ கரைசலுக்குள் நேரட் ரொன்றைத் தயாரித்து ஒவ்வொரு நிமிடத்திலும் (ஒரேயளவு) சிறிதளவு காரத்தைச் சேர்த்து வெளிவிடப்படும் ஒட்சிசன் வாயுவின் குறித்த கனவளவை சேகரிப்பதற்கு எடுக்கும் நேரத்தை அளவிடல். எல்லாம் ஒரே வெப்பநிலை நிபந்தனையில் இருக்க வேண்டும்.

சலங்களை $H_2O_2$ [illegible] பிரமாணங்களிலும் [illegible] நேர்மாறு விகிதசமம்

அதாவது $1/t \propto C$ (கரைசலின் செறிவு)

(நேரம்)




C – (செறிவு)

இவ்வாறு பெறப்படும் வரைபு மூலம் m இன் பெறுமானம் துணிய முடியும்.

(ii) வீதம் $= K[A]^x \times [B]^y$

| [A] | [B] | R |
|---|---|---|
| 1 | 1 | 1 |
| 1 | 2.02 | 3.95 |
| 3 | 1 | 1 |
| 1 | 4 | 0.59 |

$R_1 = K[A_1]^x \times [B_1]^y$ ---(1)

$R_2 = K[A_2]^x \times [B_2]^y$ ---(2)

$(1)/(2) \Rightarrow R_1/R_2 = \frac{[A_1]^x \times [B_1]^y}{A_2^x \times B_2^y}$

$1/3.95 = (1/1)^x \times (1/2.02)^y$

$1/4 = 1^x \times (1/2)^y$

$\therefore y = 2$

$1/0.59 = (3/1)^x \times (1/1)$

$1/0.59 = 3^x \times (1/4)^y$

$1/0.59 = 3^x \times 1/16$

$3^x = 16/0.59$

$= 27.1$

$\therefore x = 3$

(b) வெளி மின்வாயின் அழுத்தம் பின்வரும் சமனிலையில் தங்கியுள்ளது.

$$Ag^+_{(aq)} + e \rightleftharpoons Ag_{(s)}$$

இலேச்சற்றலியரின் தத்துவப்படி,

(i) $Ag^+$ இன் செறிவு கூடும்போது இச்சமனிலை வலப்பக்கமாக நகர்த்தப்படும். அதாவது மேலும் மேலும் அதிகமான $Ag^+$ அயன்கள் மின்வாயில் Ag அணுக்களாகப் படிகின்றன. இதனால் இம்மின்வாயானது நேர்மறை நிறத்தைப் பெறுகின்றது. இதனால் மின்வாயழுத்தம் 0.80 V இலும் அதிகமாகும்.

(2) $Ag^+$ இன் செறிவைக் குறைக்கும்போது [illegible]

Find more at: chemistrysabras.weebly.com
Twitter: ChemistrySabras

ஆகவே முழுச் வெப்ப உள்ளுறை மாற்றம் பின்வருமாறு :-

தாக்கம் $H^+_{(aq)} + OH^-_{(aq)} \longrightarrow H_2O(l)$

$= (x - y) / 0.01 \ kJ\ mol^{-1}$

N.B:

(1) $Ba(OH)_2$ இன் சிறிய மிகையான கரைசல் சேர்க்கப்படலாம்.

(2) $Ba(OH)_2$ இன் சிறிய மிகையான கரைசல் சேர்க்கப்படலாம்.

(3) தெரிந்த கனவளவு $Ba(OH)_2$ கரைசல் பயன்படுத்தப்படும்.

(4) $H_2SO_4$ க்குப் பதிலாக $Na_2SO_4$, $K_2SO_4$ கரைசல்களைப் பாவிக்கமுடியும்.

7.(a)(i) கரைசல்களில் அயன்கள் உண்டு என்பதை ஏற்றுக் கொள்வதற்கு மின் கடத்துதல் சம்பந்தமான சான்று தவிர்ந்த இரண்டு காரணங்கள் தருக.

(ii) ஒரு பன்பரிப் பகுப்பு பரிசோதனையில் 0.01 mol $l^{-1}$ $Cu^{2+}$ செறிவும், 0.06 mol $l^{-1}$ $Ni^{2+}$ செறிவும் கொண்டதுமான ஒரு நீர்க் கரைசலை குறித்த ஒரு வெப்பநிலையில் $H_2S$ வாயுவினால் நிரம்பிய நிலைக்குக் கொண்டுவரத் திட்டமிடுகிறீர். NiS வீழ்படிவு தோன்றுவதை தடுப்பதற்கு மேற்படி கரைசலில் இருக்கக் கூடிய அதிக குறைந்த ஐதரசன் அயனின் செறிவைக் கணிக்க.
சம்பந்தப்பட்ட வெப்ப நிலையில் NiS இன் $K_{sp} = 3 \times 10^{-20}\ mol^2 l^{-2}$

அதே வெப்பநிலையில் $H_2S$ னால் நிரம்பிய நீர்க்கரைசலொன்றில் $[Ni^{2+}]^2 \times [S^{2-}] = 1.25 \times 10^{-23}\ mol^3 l^{-3}$ ஆகும்.

(b)(i) அமிலங்களுக்கும் மூலங்களுக்குமான ஆரீனியசு (Arrhenius) எண்ணக்கரு, லவுரி-புரொன்ஸ்ரெட் (Lowry-Bronsted) எண்ணக்கரு பற்றி விளக்குக. இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட எண்ணக்கரு ஏன் முதலாவதை விட கூடப் பொருத்தமானது என்பதை விளக்குக.

(ii) 50.00 ml 1.0 mol $l^{-1}$ $HNO_3$ உடன் 49.95 ml, 1.0 mol $l^{-1}$ KOH கலக்கப்பட்டன. இதில் பெறப்பட்ட கரைசலின் pOH ஐக் கணிக்க. $K_w$, சம்பந்தப்பட்ட வெப்பநிலையில் $= 1.0 \times 10^{-14}\ mol^2 l^{-2}$

(c) அமோனியம் குளோரைட்டு நீர்க்கரைசலொன்று காபன் மின்வாய்களின் மூலம் கவிசமான நேரத்திற்கு மின்பகுப்புச் செய்யப்பட்டது. இப்படிப் பெறப்பட்ட கரைசல் ஆரம்பத்தில் இருந்த கரைசல் போலல்லாமல் தாங்கி செயற்பாடு கொண்டுள்ளது. இந்த அவதானிப்பை விளக்குவது மாத்திரமன்றி எப்படித் தாங்கித்தாக்கம் நடைபெறுகிறது என்பதையும் விளக்குக.

விடை :-

7.(a)(i) வன்னமில – வன்மூல நடுநிலையாக்கலு வெப்பம் மாறுப் பெறுமானத்தை கொண்டிருக்கின்.

(2) HCl, KCl, $MgCl_2$, $CaCl_2$ ....ect... நீரில் கரைந்துள்ளபோது கரைசல்களின் கூவியமுக்கங்கள் அசாதாரணமாக குறைகின்றன. (கூவியமுக்க இறக்கம் ஏற்படும்)

(3) ஒப்பெறுட்டுக் நீரிற்கரைவதால் உருவாகும் கரைசல்களின் அசாதாரண கொதிநிலை உயர்வு.

(4) இதேபோன்று உறைநிலை இறக்கம் காணப்படல்.

(5) இதேபோன்று அசாதாரண அளவு உயர்வான பிரசாரண அமுக்கம் காணப்படல்.

(ii) NiS வீழ்படிவாவதற்குரிய மிகக்குறைந்த $S^{2-}$ இன் செறிவு



$[Ni^{2+}] \times [S^{2-}] = 3 \times 10^{-20}\ mol^2 l^{-2}$

$0.06\ mol\ l^{-1} \times [S^{2-}] = 3 \times 10^{-20}\ mol^2 l^{-2}$

$[S^{2-}] = \dfrac{3 \times 10^{-20}\ mol^2\ l^{-2}}{0.06\ mol\ l^{-1}}$

$= 5 \times 10^{-19}\ mol\ l^{-1}$

NiS வீழ்படிவாவதை தடுக்கக்கூடிய அதிக குறைந்த ஐதரசன் அயனின் செறிவு பின்வருமாறு :-

$[H^+]^2 \times 5 \times 10^{-19}\ mol\ l^{-1} = 1.25 \times 10^{-23}$

$[H^+]^2 = \dfrac{1.25 \times 10^{-23}\ mol^3\ l^{-3}}{5 \times 10^{-19}\ mol\ l^{-1}}$

$= 0.25 \times 10^{-4}\ mol^2 l^{-2}$

$[H^+] = 0.5 \times 10^{-2}\ mol^2 l^{-1}$

(b)(i) ஆரீனியஸ் கொள்கைப்படி, ஒரு பதார்த்தம் நீர்க்கரைசலில் அயன்களைத் தோற்றுவித்தால் அமிலம் எனவும், நீர்க்கரைசலில் அயன்களைத் தோற்றுவித்தால் அல்லது அயன்களுடன் தாக்கி உப்பையும், நீரையும் தோற்றுவித்தால் மூலம் எனவும் கருதப்படும்.

புரோன்ஸ்டட்-லோரி கொள்கைப்படி, புரோத்தன் கொடுக்கி புரோத்தன் வாங்கி மூலமென்பர் கருதப்படும்.

N.B; ஆரீனியஸ் கொள்கை நீர்க்கரைசல் நிலையில் காணப்படுவதுக்கு மட்டுமே பொருந்தும். ஆனால் புரோன்ஸ்டட்-லோரி நீரற்ற ஊடகங்களிலும் நிகழும் தாக்கங்களுக்கு பயன்படுத்த முடியும்.

(ii) ஊடகத்தில் எஞ்சிய மிகை $HNO_3$ = 0.10 ml 1.0 mol $l^{-1}$

விளைவுக் கரைசலில் உள்ள $H^+$ அயனின் செறிவு

$= \dfrac{0.10}{10000}$ mol $l^{-1}$

$= 1.0 \times 10^{-5}$ mol $l^{-1}$

$[H^+] = 1.0 \times 10^{-5}$ mol $l^{-1}$

ஆனால் $[H^+] \times [OH^-]$

$[OH^-] = \dfrac{1.0 \times 10^{-14}}{1.0 \times 10^{-3}}$

$= 1.0 \times 10^{-11}$ mol $l^{-1}$

$pOH = -\log_{10}(1.0 \times 10^{-11})$

$pOH = 11$

Find more at: chemistrysabras.weebly.com
Twitter: @ChemistrySabras

[illegible] முறையாக நகாத்தப்படுகின்றன. அதாவது மென்மேலும் $Ag^+$ அயன்கள் உருவாகும். இவை Ag –மின்வாயிலுள்ள வெள்ளி அணுக்கள் கரைவதனால் சாத்தியமாகும். இவ்வாறு நடைபெறுவதனால் வெள்ளி மின்வாயினது நேரேற்றம் குறைவடைகிறது. இதனால் மின்வாயழுத்தம் +0.80 V இலிருந்து குறைவடையும்.

(o)(1) அயனுக்கும் அறைகளைப்பயன்படுத்துவதன் மூலம்




(வாயு air, $CO_2$, $N_2$, Ar, $CH_4$ )

கதிர்ப்பு உட்செல்ல அறையின் உள்ள வாயுத்துணிக்கைகளை அயனாக்கும். பிரயோகிக்கப்படும் அழுத்தவேறுபாடு அதிகரிக்கப்படும்போது மின்னோட்டம் (சுற்றில்) அதிகரிக்கும். எனினும் சுற்றில் ஓட்டம் மாறுபெறுமானம் அடையும் வரையே அதிகரிக்கும். இம்மாறு மின்னோட்டத்தின் அளவுகதிர்ப்பின் அளவாகக் கருதப்படுகின்றது.

(2) கைகக் – முல்லர் எண்ணி மூலம்




மின்வாய்களிடையே உயர் மின்னழுத்த வேறுபாடு பிரயோகிக்கப்படும். கதிர்ப்பு உட்புக வாயு அயனாக்கமடையும். இதனால் மின்வாய்களிடையே ஓட்டம் பாயும்போது துடிப்பு ஒலி தோன்றும். இவ் ஒலி எண்ணிக்கையை அலகு நேரஇடைவெளியில் கவிப்பிடுவதற்கு ஏற்ற நிலை இங்கு உள்ளது. இவ் அளவீடு கதிர்ப்பின் அளவை தருவதாக அமையும். (அதாவது ஒலி எண்ணிக்கை – அலகுநேர இடையில் எண்ணப்பட்ட கதிர்ப்பின் அளவாகும்.)

(3) புளோரொனிர்வு எண்ணி.

NaI, CsI பளிங்கு நற்த்தன்மை, அந்திரனிலும், போன்றவற்றின் மீது கதிர்ப்பு பதியும்போது கதிர்ப்புத் துணிக்கைகளின் சக்தி இப்பொருள்களுக்கு இடம் மாறுகின்றது. அப்போது அவை புளோரொனிரும் வெளியேறும் ஒளி மின்னாக மாற்றப்படும். ஓட்டத்தின் வலிமை கதிர்ப்பின் அளவாகக் கொள்ளப்படுகிறது.

பகுதி "இ" – கட்டுரை

இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
ஒவ்வொரு வினாவுக்கும் 15 புள்ளிகள் வழங்கப்படும்.

(a) கடல் நீரிலிருந்து சோடிய உலோகத்தைப் பிரித்தெடுப்பதில் தொடர்புள்ள பௌதிக–இரசாயனக் கொள்கைகள் பற்றி ஒரு சுருக்கமான விவரணம் எழுதுக.

(b) கீழே தரப்பட்டுள்ள மாற்றங்களை–எவ்வாறு நிகழ்த்தலாம் எனக் குறிப்பிடுக.

மு.கு: தேவையான பொருட்களையும், தாக்க நிபந்தனைகளையும் உரிய இடத்தில் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். ஈடு செய்யப்பட்ட இரசாயனச் சமன்பாடுகள் அவசியமற்றவை.

(1) $CuFeS_2 \longrightarrow KHSO_4$ (11) $KI \longrightarrow NaIO_x$

மு.கு: இத்தாக்கங்களிற்கான ஈடு செய்யப்பட்ட இரசாயனச் சமன்பாடுகள் எழுதப்படல் வேண்டும்.

(1) C (11) Cu

(d) $HNO_3$ $K_2CrO_4$ – ஆகிய இரண்டும் அடங்கிய கலவையொன்று உமக்குத் தரப்பட்டுள்ளது. அதனுடன் சேர்த்தலைப் பொருட்களாக உமக்கு $Ba(NO_3)_2$ $CH_3COOH$ ஆகியன மாத்திரம் வைக்கப்பட்டுள்ளன. உமக்குத் தரப்பட்ட கலவையில் $KNO_3$ உள்ளதென்பதை எவ்வாறு காட்டுவீரென விளக்குக.

விடை:–

9.(a) கடல் நீரிலிருந்து NaCl பிரித்தெடுக்கப்படுகின்றது. கடல்நீர், உப்பளங்களில் சூரிய வெப்பத்தினால் ஆவியாக்கப்பட்டு $CaCO_3$ யும் $CaSO_4$ முறையே வீழ்படிவாக்கப்பட்டு அகற்றப்பட்டதன் பின்னர், மேலும் ஆவியாக்கல் மூலம் NaCl வீழ்படிவாக்கப்படுகின்றது.

Na மிக மின்னேற்றா மூலகமாகையால், அதனைப் பிரித்தெடுக்கும்போது பொதுவான இரசாயனத் தாழ்த்தல் முறைகளைப் பயன்படுத்த முடியாது. எனவே மின்பகுப்பு முறையொன்றினைப் பயன்படுத்தல் வேண்டும்.

NaCl நீர்க் கரைசலொன்றின் மின்பகுத்தலில் $Na^+$ அயன்களுக்குப் பதிலாக $H^+$ அயன்கள் கதோட்டில் நெக்கமடைகின்றன. எனவே நீரற்ற NaCl னை மின்பகுத்தல் வேண்டும். திண்ம NaCl மின்னைக் கடத்துவதில்லையாதலால் உருகிய NaCl இனையே மின்பகுத்தல் வேண்டும்.

NaCl னின் உருகு நிலையைக் குறைப்பதற்காகச் சிறிதளவு $NaCl_2$ சேர்க்கப்படும். மின்பகுப்புக்காக Fe கதோட்டும் கிரபைட்டு அனோட்டும் பயன்படுத்தப்படும்.

(b)(1)

$$CuFeS_2 \xrightarrow[\text{வடிகட்டுக.}]{\text{வளியில்}/O_2 \quad \text{வறுள்}} SO_2$$

$$SO_2 + O_2 \xrightarrow{V_2O_5} SO_{3(g)}$$

$$SO_3 + KOH_{(aq)} \longrightarrow KHSO_{4(aq)}$$

(2)

$$KI \xrightarrow{\text{செறி}\ H_2SO_4} I_2$$

$$I_2 + NaOH \xrightarrow[\Delta]{\text{சூடான செறிந்த}} NaIO_3$$

(c)(1)

$$C + 4HNO_{3(aq)} \xrightarrow[\Delta]{\text{சூடான செறிந்த}} CO_2 + 4NO_2 + 2H_2O$$

(2)

$$3Cu + 8HNO_{3(aq)} \xrightarrow{\text{சூடான செறிந்த}} 3Cu(NO_3)_2 + 2NO + 4H_2O$$

$$Cu + 4HNO_{3(aq)} \xrightarrow{\text{சூடான செறிந்த}} Cu(NO_3)_2 + 2NO_2 + 2H_2O$$

(d)

$$Ba(NO_3)_2 \xrightarrow{\text{சூடாக்குக}} BaO_{(s)}$$

BaO இனை அசெற்றிக் அமிலத்தில் கரைக்க. அப்போது பேரியம் அசெற்றேற்று நீர்க் கரைசல் கிடைக்கப்பெறும். கலவையுடன் இந்த பேரியம் அசெற்றேற்றுக் கரைசலைச் சேர்க்க. அப்போது, $BaCrO_4$ வீழ்படியும். இதனை வடித்து அப்புறப்படுத்திய பின், நீர்க்கரைசலில் $K^+$, $NO_3^-$, $Ba^{++}$, $CH_3COO^-$ அயன்கள் அடங்கியிருக்கும். இக்கரைசலை ஆவியாக்கி, நன்கு சூடாக்குவதால், வெளியேறும் வாயுவில் $NO_2$ அடங்கியுள்ளது. எப்பதையும் தனற்குச்சியை ஒளிரச் செய்வதன் மூலம் $O_2$ அடங்கியுள்ளது எப்பதையும் வெளிக்காண்பதன் மூலம் கலவையில் $NO_3^-$ அடங்கியிருந்தது எப்பதையும் நிரூபிக்கலாம்.

Twitter: ChemistrySabras
Find more at: chemistrysabras.weebly.com

$$2KNO_3 \longrightarrow 2\,KNO_2 + O_2$$

$$2Ba(NO_3)_2 \longrightarrow 2BaO + 4NO_2 + O_2$$

10. (a) "உலர் முறையில்" சீமெந்து உற்பத்தியில் போது நிகழ்கின்ற வெவ்வேறு படிமுறைகள் பற்றி ஒரு சுருக்கமான விபரணம் எழுதுக.

(b) (1) இரும்பு துருப்பிடித்தலுக்கு உதவும் காரணிகள் எவை?

(11) இரும்பு துருப்பிடிப்பதற்கு அந்தக் காரணிகள் உதவுகின்றன என்பதை எவ்வாறு பரிசோதனை மூலம் காட்டுவீரென விளக்குக.

(c) $CaCO_3$, $K_2CO_3$, $SiO_2$, KCl ஆகிய அடங்கிய திண்மக் கலவையொன்று உமக்குத் தரப்பட்டுள்ளது. இந்தக் கலவையில் $CaCO_3$, $K_2CO_3$, KCl ஆகியவற்றின் நூற்றுவீத நிறையை நிர்ணயிப்பதற்கு பகுப்புத் திட்டமொன்றினைப் பிரேரிக்க. மு.கு: செய்முறை விபரங்கள் அவசியமற்றன.

விடை :-

10. (a) (1) களியிலிருந்து கற்களும் பரளும் நீக்கப்படும்.

(2) சுண்ணக்கல்லும் களியும் கலந்து அரைக்கப்படும்.

(3) கலவையை மிகையான வெப்பநிலையில் சூளை கலவடுப்பில் சூடாக்கப்படும்.

(4) எண்ணெய் எரிப்பதன் மூலம் வெப்பம் வழங்கப்படும்.

(5) கலவை கலவடுப்பின் கீழ்ப்பகுதியை அடையும்போது அதிலிருந்த முதலில் நீர் அகற்றப்படும்.

(6) ஏறத்தாழ 600 °C வெப்பநிலையில் காபன் விடுவிக்கப்படும்.

(7) ஏறத்தாழ 1000°C வெப்பநிலையில் $CaCO_3$ பிரிகையடையும்.

$$CaCO_3 \longrightarrow CaO + CO_2$$

(8) ஏறத்தாழ 1400°C வெப்பநிலையில் அலுமினியம் சிலிக்கேற்றும் கல்சியம் சிலிக்கேற்றும் தொற்றித் திண்மச் சேர்வை உருகும். இக் கலவை குளிர்ச்சியடைந்து கிளிங்கராகக் கலவடுப்பிலிருந்து வெளியேறும்.

(9) கிளிங்கருடன் $CaSO_4 . 2H_2O$ இச்சம் சிறிதளவு சேர்த்து கலவை நன்கு அரைக்கப்படும். இது போர்ட்லண்ட் சீமெந்து என அழைக்கப்படும்.

(b) (1) நீர்

$O_2$ / வளி

$CO_2$ / உப்பு/ அமிலம்

இரும்பைவிட குறைந்த மின்வேர்த் தன்மையைக் கொண்ட உலோகமொன்றுடன் தொடுகையுறுதல் காணப்படல்.

(11) இப்பரிசோதனையில் போது தடவைக்கு ஒரு காரணியின் பங்களிப்பைச் சோதிக்கலாம். எப்போதும் ஒழுங்குப் பரிசோதனை நடத்திப்படல் வேண்டும்.

(2) அரிப்புக்கு நீர் அல்லது புரிசிற்றல் எனச் சோதித்தல்.

சுத்தமான இரும்பு ஆணியொன்றினை உலர்ந்த சோதனைக்குழாயொன்றுள் இட்டு மூடிவைக்க. கட்டுப்பாட்டுப் பரிசோதனையாக, மற்றுமொரு சோதனைக்குழாயுள் ஈரலிப்புடன் மற்றைய ஆணியை ஒத்த ஒர் ஆணியை இட்டு மூடிவைக்க. ஓரிரண்டு நாள்களின் பின்னர் அவதானிக்க. ஈரலிப்புடன் கூடிய சோதனைக் குழாயுள் உள்ள ஆணி கடுமையாக அரிப்புக்குள்ளாகி இருப்பதைக் காணலாம்.




$O_2$ அரிப்புக்குத் தூண்டு புரிசிற்றதா எனச் சோதித்தல்.

A சோதனைக்குழாயுள் கொதிக்கவைத்த காய்ச்சிவடிந்த நீரில் மீது எண்ணெய்ப்படை இடப்பட்டு ஆறவிட்டு அதனுள் சுத்தமான இரும்பு ஆணி இடப்பட்டுள்ளது.

B குழாயுள் நீரின்மீது எண்ணப்படை இட்டு அதனுள் சுத்தமான ஆணி இடப்பட்டுள்ளது.




இரண்டு நாள்களின் பின்னர் அவதானிக்கும்போது B குழாயில் உள்ள ஆணி அதிகளவு அரிப்படைந்துள்ளமையை அறிய முடியும்.

(கொதிக்கவைத்த போது, நீரில் கரைந்திருந்த $O_2$ வாயு வெளியேறியமையால் அதனால் இட்ட ஆணிக்கு $O_2$ கிடைப்பதில்லை.)

அரிப்புக்கு ஏதேனும் உலோகங்கள் துணையாக அமைகின்றனவா எனச் சோதித்தல்




இரண்டு பெற்றிக் கிண்ணங்கள் எடுத்து $K_3Fe(CN)_{6(aq)}$ உம் $NaCl_{(aq)}$ உம் அடங்கிய கலவையை இடுக. A பெற்றிக் கிண்ணத்தில் சுத்தமான ஓர் இரும்பு ஆணியை மட்டும் இடுக.

B பெற்றிக் கிண்ணத்தினுள் சிலமொத்துடன் தொடுகையுறும் வண்ணம் சுத்தமான இரும்பு ஆணியொன்றினை இடுக.

ஒரு நாளின் பின்னர், அவதானிக்கும் போது B கிண்ணத்தில் அடர்மஞ்சள் நிறமுடைய ஏகார் கடுதலான நீலநிறத்தைப் பெற்றிருக்கமையைக் காணலாம். இது மின் நேர்த்தன்மை குறைவான ஓர் உலோகமாகும்.

(c) கலவையில் 100g இனை அளந்து கொள்க. மிகையளவு நீருடன் கலந்து நன்கு கலக்கி வடிகட்டிக்கொள்க. KCl உம் $K_2CO_3$ யும் கரைசலாக அடையும். $SiO_2$, $CaCO_3$ என்பன கரைவதில்லையாதலால் வீழ்படிவு எஞ்சியிருக்கும்.

வீழ்படிவை உலர்த்தி நிறுக்க. $M_1$ பின்னர், அதனுடன் ஒதுக்கிய அளவு அமிலத்தை இட்டு வாயுக் குமிழிகள் வெளிவருவது முற்றுப்பெறும்வரை அமிலம் சேர்த்து, கலவையை வடிகட்டும்போது வீழ்படிவில் $SiO_2$ எஞ்சும். இதனை உலர்த்தி நிறுக்க. $M_2$

$CaCO_3$ சதவீதம் = $M_1 - M_2$ ஆகும்.

இனி KCl, $K_2CO_3$ அடங்கியுள்ள கரைசலை குவமான HCl கரைசலுடன் பிரித்தலில் இட்டு நியமிக்க. நியமிப்பு மாறிப்பு மூலம், கலவையில் அடங்கியுள்ள $K_2CO_3$ இனைக் கணிக்கலாம். இது $K_2CO_3$ சதவீதமாகும்.

எனவே KCl % = 100 − ( SiO % + $CaCO_3$% + $K_2CO_3$% )

11. (a) "துவர்த்தன அட்டவணையில் ஒதுக்கப்பட்டுள்ள கட்டம் 1, கட்டம் 7 ஆகிய இரண்டினை வைக்கலாம்".

இக்கூற்றை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் தருக.

(b) அமோனியாவை வளியினால் ஒட்சியேற்றமுடியும் என்பதை எவ்வாறு ஆய்வுகூடத்தில் காட்டுவீரென விளக்குக. மு.கு. நடு செய்யப்பட்ட இரசாயனச் சமன்பாடுகள் எழுதப்படல் வேண்டும்.

(e) வாசனை எண்ணெய் ( essential oil ) வகைகளை பிரித்தெடுப்பதில் கொதி நீராவிக் காய்ச்சி வடித்தல் முறையைப் பாவித்தல் சம்பந்தமான கொள்கையை விளக்குக.

(d) (1) சிவப்பு மாணிக்கத்தின் ( ruby ) சுவடு அளவில் உள்ள மூலகம் (மூலகங்கள்) என்ன (எவை)?

(11) நீல மாணிக்கத்தின் ( Sapphire ) சுவடு அளவில் உள்ள மூலகம்

Find more at: chemistryscienceslessons.blogspot.com
Twitter: ChemistrySabaas